**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 262/2026**
**U/s. 303(2) BNS**
**PROSECUTION WITNESS NO. 3 (LW. 2)**

| | |
|---|---|
| **Name** : ராஜாராம். | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**2** வது எதிரி ஆஜர் இல்லை. **355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.
(**Parent CC No. 23/2026 1** வது எதிரி இந்த வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். **)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 262/2026 03.07.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.55 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தஞ்சாவூர் அருளானந்தம் நகர் புஷ்பம் காலனியில் குடியிருந்து கரூர் வைசியா வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அசாஆ ஆக குறியீடு செய்யப்படுகிறது. தலைமை அஞ்சலகத்தில் 18.07.2025 ம் தேதி மாலை வண்டி காணாமல் போனது சம்மந்தமாக வரைப்படம் வரைந்தார்கள் . அதில் நானும் , விக்னேஷ் என்பவரும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் முன்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்- S.T. கனிமொழி, L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.